செய்தி வெளியீடு எண் : 08 நாள் : 03.03.2021

**தேனி மாவட்டம்**
**தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பான புகார்களை**
**1800 425 6339 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர்**
**திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**

இந்திய தேர்தல் ஆணைய உத்தரவின்பேரில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021-க்கான கால அட்டவணை 26.02.2021 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அன்று முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக, தேனி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்க தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு தேர்தல் தொடர்பாக வரும் புகார்களை உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பிரத்யோகமாக 24 x 7 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறை இயங்கும் வண்ணம் சுழற்சி முறையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்வதற்கான கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 425 6339 ஆகும். எனவே, பொதுமக்கள் தேனி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் ஏதுமிருப்பின் மேற்படி கட்டணமில்லா எண்ணில் 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவித்தால், சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தெரியப்படுத்தப்பட்டு உடனடியாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**